# 1 கம்ப்யூட்டரில் லட்சம் புத்தகங்கள்!

விஷுவல் மீடியாக்களின் தாக்கத்தைத் தாண்டியும் வாசிப்புப் பழக்கம் நீடிக்கவே செய்கிறது. ஆடியோ புக், இ–புக் என பதிப்புத்துறை புதிய பரிமாணங்களை எடுத்துவருகிறது. அப்படியொரு புதிய வடிவம்தான் சங்கப்பலகை. தமிழ் நூல்கள், பருவ இதழ்களின் ஆன்லைன் மையம் இது.

புகைப்படக்கலைஞர் எம்.ஏ.பார்த்தசாரதியின் புதிய முயற்சி இது. உலகின் எந்த மூலையில் இருந்தும், தமிழ் நூல்கள், இதழ்களை சுடச்சுட படிக்க முடியும். போர், பணிச்சூழல் காரணமாக உலகெங்கும் இடம்பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கு பயனுள்ள படிப்பகமாகி இருக்கிறது சங்கப்பலகை.

“அமெரிக்கன் சினிமாட்டோகிராபர், மேக் வேர்ல்டு இதழ்களோட தீவிர வாசகன் நான். ஆனா, அந்தப் புத்தகங்கள் நம் சென்னையில் அவ்வளவு எளிதா கிடைக்காது. இன்டர்நெட்ல கூட பழைய இதழ்கள்தான் படிக்கக் கிடைக்கும்.

இந்த மாதிரி ஏக்கம் உலகம் முழுதும் வாழும் தமிழர்கள் எல்லாருக்கும் உண்டு. தமிழகத்தில வெளியிடப்படுற ஒரு புத்தகம் அவங்களுக்குக் கிடைக்கிறது சாதாரணம் இல்ல.

